பிசக்குகிறது, க்கினேன், க்குவேன், க்கு, க்க, v.a. de பிசகுகிறது et de பிசங்குகிறது, பிசக்கல், பிசக்குதல், n.v. empêcher, mettre obstacle, froisser, rendre pliant.

*பிசங்கதை, (பிசங்கம், தை), couleur basanée, brune, jaune foncé,— brun, blancheur.

*பிசங்கம், பிசங்கத்துவம், (pisanga), couleur brune, basanée, jaune rougeâtre.

பிசங்குகிறது, கினேன், குவேன், கு, ங, v.n. பிசங்கல், பிசங்குதல், n.v. V. தலங்குகிறது. [dos d'animal.

*பிசண்டம், (pitchanda), ventre,

*பிசண்டிலன், (பிசண்டம், ila), ventre.

பிசத்துகிறது, த்தினேன், த்துவேன், த்து, த்த, v.n. பிசத்துதல், பிசத்தல், n.v. P. பிறந்துகிறது.

பிசம், P. பிச்சம், plume.

பிசல், 1° bosse du garrot des bœufs indiens. 2° P. புசல், tempête.

*பிசவ்வியம், (pitchavya), le cotonnier பருத்தி.

பிசறுகிறது, றினேன், றுவேன், று, ற, v.a. பிசறல், பிசறுதல், n.v. mêler, mélanger, pétrir avec les mains: சோற்றிலே — mêler dans son riz cuit.

பிசனம், sandal rouge. [

*பிசாசி, (பிசாசன், ki), Koubêren dont les trésors sont gardés par les pisâchas ou démons.

*பிசாசம், (pisâtcha), démon, canne à sucre sauvage.

*பிசாசன், பிசாசகன், pl. பிசாசர், பிசாசகர், (id. ka), démon, diable, lutin, esprit malin et malfaisant, homme méchant comme un démon: பிசாச்சபம், (சபை), assemblée de démons, pandémonium: பிசாசத்தரு,—விருக்ஷம் l'arbre favori des démons, trophis aspera; பிசாசவப்பிரியம் l'arbre désagréable aux diables, avec lequel on prétend les chasser, i.e. le வேம்பு.

*பிசாசி, பிசாசிகை, (pisâtchi, kâ), diablesse, démon femelle.

பிசாசு, voc. பிசாசே, gén. பிசாசின், (பிசாசம்), diable, démon, esprit malin, — malfaisant, diablotin, lutin, géant d'un ordre inférieur: — பண்ணுகிறமடிப்பு ou மோசம் ruses —, artifices —, perfidies du démon: — பிடித்திருக்கிறது être possédé du démon: பிசாசினாலேயப்படுகிறது être poussé, excité, guidé ou inspiré par le démon; பிசாசின்மயக்கத்தினாலேயப்படுகிறது être trompé par les illusions du démon: பிசாசைஓட்டுகிறது,— துரத்துகிறது chasser le démon. [tromperie du démon.

பிசாசெத்து, (பிசாசு, எத்து),

பிசாச்சி, l'herbe சடாமாஞ்சில்.

பிசாரதம், nouveauté.

பிசானம், espèce de riz grossier, V. பசானம்: பிசானநாற்று semis de cette espèce de riz pour être transplanté; — ப்பயிர் cette espèce de riz en herbe.

பிசான், saleté, malpropreté, chose gluante: — பிடிக்கிறது être gluant.

பிசி, chose rare, précieuse, dispendieuse, riz cuit, mensonge.

*பிசிண்டம், பிசிண்டிலன், (pitchinda, ila), V. பிசண்டம், பிசண்டிலன்.

*பிசிதம், 1° (pisita), chair. 2° eau, l'arbre வேம்பு, preuve, exemple,— d'une règle.

*பிசிதாசனன், பிசிதாசி, (பிசிதம், அசனம், asa manger), mangeur de chair, géant, cannibale, démon.

பிசிர், goutte (de pluie, de fonte...) bruine. [dommage, tort.

*பிசினம், P. பிசுனம், calomnie,

பிசினரிசி, (பிசின், அரிசி), espèce de riz rougeâtre et gluant venant d'Assam.

பிசினாறி, (id. நாறி), V. பிசினேறி.

பிசினி, 1° (பிசின்), gomme, glu, résine, colle. 2° P. பிசுனி, avare, chiche, tenace, calomniateur: — த்தனம் avarice, ténacité, mesquinerie: — த்தனம்பண்ணுகிறது être tenace, trop chiche: — த்தனக்காரன் avare, tenace, chiche, mesquin.

Digitized by Google

பிசினேறி,(பிசின்,ஏறி),sorte d'arbre. *V.* பிசினித்தனக்காரன்.

பிசின்,gomme, résine, glu.poix, benjoin,la plante aquatique நீர்வஞ்சி,fil de coton, jeune plant—,jet de palmier (qu'on peut manger), *V.* வெட்டுக்குருத்து: அத்திப் — gomme de figuier; இலவம் — gomme de cotonnier; —வேலம் —, கருவேலம் — gomme arabique;பிசினுயிருக்கிறது,பிசின்போலிருக்கிறது être gluant,visqueux,résineux,gommeux:— தடவுகிறது enduire de gomme, frotter avec de la gomme.

*பிசு,(pitchou), coton, poids de 2 துலாம்,Pisou, nom d'un அசுரன் ou démon,espèce de lèpre, une des 8 faces de வயிரவன்.

*பிசுகம். (pitchouka), la plante vangueria spinosa.

பிசுகுகிறது, *sync.* பிசுகிறது, கினேன்,குவேன்,கு.ச,*v.a.*பிசுகல், பிசுகுதல்,*n. v. et* பிசுகிக்கேட்கிறது, marchander, disputer sur le prix, demander du surplus, — quelque chose par-dessus le marché; பிசுகாமற்போகிறது s'en aller sans rien demander par-dessus le marché.

பிசுக்கு, 1° *n.v. du préc.* pincée, surplus,addition,demande de quelque chose par-dessus le marché, dispute sur le prix: — போடுகிறது donner quelque chose par-dessus le marché. 2° glu. *V.* பிசக்கு; பிசுக்கெட்டுகிறது se coller,être gluant.

*பிசுதூலம்,(பிசு),le cotonnier பருத்தி,coton.

பிசுபிசுப்பு, *(mot imitatif)*, chose gluante,visqueuse. [ant, se coller.

பிசுபிசென்கிறது,(*id.*), être glu-

*பிசுமத்தம்,பிசுமத்தம்,பிசுமர்த்தம்,(pitchoumanda,— martta),l'arbre வேம்பு,margosa.

*பிசுலம்,(pitchoula), coton, l'arbre tamarix,corbeau aquatique.

*பிசுனம்,1° (pisouna),méchanceté,corbeau,safran, *V.*பிசுதூலம். 2° (பிசின்), *ou* பிசுனத்தனம், பிசுனத்துவம்,ténacité aux espèces,avarice, mesquinerie; பிசுனத் தனக்காரன் avare,chiche,tenace; —வசனம், — வாக்கியம் calomnie, reproche, mauvais discours.

*பிசுனன்,(*id.*), 1° calomniateur, menteur,méchant homme, espion, rapporteur,(surnom de) Nâraden. 2° avare,tenace,chiche. [சினேறி.

பிசுனுறி,பிசுனேறி,*P.*பிசினுறி,பி

பிசுனி,(பிசுனம்),avare,mesquin, tenace:—த்தனம் avarice,mesquinerie.

பிசுநம், la plante வேலிப்பருத்தி.

பிசைகிறது, சைந்தேன், சைவேன்,சை,சைய,*v.a.*பிசைதல்,*n.v.et* பிசைந்துபோடுகிறது,pétrir (de la farine...),mélanger,—le riz avec le கறி ou ragoût,se frotter(les yeux...) broyer dans la main,*v.g.* un épi...; பிசைந்தமா pâte pétrie pour faire

பிசைவு,*n.v.du préc.* [du pain.

*பிச்சடம், (pitchtchata), étain, plomb,zinc,inflammation des yeux, ophthalmie.

*பிச்சம்,(pitchtchha),queue de paon,plume,panache—,paquet de plumes de paon,crête, cheveux ou poil d'homme,touffe de cheveux du sommet de la tête, couronne, ombrelle blanche, tige du melon d'eau, la plante வத்தகு, la plante இருவேலி, l'arbre சாஞ்சிரை:பிச்சப்பழம் fruit du வத்தகு. [enthousiaste,fanatique.

பிச்சன்,*pl* பிச்சர்,*P.*பித்தன், fou,

பிச்சல்,*P.*பிய்ச்சல், action de déchirer.

*பிச்சா,*obl.de* பிக்ஷை:—சரம்,*V.* பிக்ஷாசரம்;—தானம்,*V.* பிக்ஷாதானம்;—பாத்திரம்,*V.* பிக்ஷாபாத்திரம்.

*பிச்சாகாரம்,*P.*பிக்ஷாகாரம்.

*பிச்சாடனம், *P.* பிக்ஷாடனம்.

பிச்சாடிக்கயிறு,*V.*பாளாசக்கயிறு,corde pour attacher un cheval à un piquet.

பிச்சி espèce de jasmin,—de melon,- de plante rampante et grimpante, l'arbrisseau சிறுசண்பகம், espèce de démon.

*பிச்சிலம், (pitchtchhila), sauce, ragoût, soupe, humidité, cange ou eau de riz.

Digitized by Google

பிச்சு, 1° P. பித்து, bile, fiel. 2° P. பிய்ச்சு. gér. de பிய்க்கிறது.

*பிச்சை, 1° P. பிக்ஷை, aumône, mendicité, quête, service, gage, salaire, poignée de nourriture donnée en aumône. 2° (bhissâ), riz cuit. 3° (pitchtchhâ), l'arbre சிசு, dalbergia, ligne, rang, rangée, ordre, écume d'eau de riz, arec, bananier, banane, corset, espèce de jaquette, salive venimeuse du serpent, gomme du cotonnier soyeux இலவு. 4° la plante ou tige du melon d'eau, la plante வத்தகு: — க்காய் melon d'eau; — க்காரன் mendiant, pauvre; — க்குடி vivre d'aumônes, famille pauvre, — de mendians; — கேட்கிறது demander l'aumône; தாலிப்— கேட்கிறது demander la conservation de son tâli, i.e. la conservation de son mari; பிள்ளைப் - கேட்கிறது demander en grâce (à Dieu) des enfans; — ச்சாதம், — ச்சோறு riz cuit donné ou reçu en aumône, — pour les pauvres; — கொடுக்கிறது, — பகிருகிறது, — பகுந்திடுகிறது, — போடுகிறது donner —, distribuer l'aumône; — த்தனம் mendicité, pauvreté: — ப்படி petite mesure, mesure pour l'aumône; — பண்ணுகிறது (des sannyasis...) manger chez quelqu'un, mendier; — முட்டி poignée de riz donnée en aumône; — யெடுக்கிறது, — வாங்குகிறது, recevoir l'aumône, recueillir des aumônes, mendier, vivre d'aumône; — யுண்ணி mendiant, qui vit d'aumônes; ஐயாநீரென்வீட்டிலின்றைக்குப் பிச்சைபண்ணும் monsieur, veuillez prendre aujourd'hui votre repas dans ma maison. [teau, pâtisserie.

*பிஷ்டகம், (pichtaka), petit gâ-

*பிஷ்டபம், (pichtapa), le monde.

*பிஷ்டம், (pichta), farine et choses semblables, farine moulue, — pilée, — ou mets de choses broyées, collation, bouchée, morceau, plomb, étain, V. பிருஷ்டம்: பிஷ்டபசு, litt. bœuf de farine, victime faite de fleur de farine; — பசனம், — பாசகம் chaudière, bouilloire, casserole.

*பிஷ்டவர்த்தி, (pichtavartti), espèce de gâteau, de pâtisserie.

*பிஷ்டிகம், பிஷ்டிகை, (pichtika, kâ), gâteau de farine de riz.

*பிஷ்டை, P. விஷ்டை, ordure, fiente d'animaux.

பிஸ்தி, pièce que les tailleurs mettent au derrière d'un pantalon,

*பிஞ்சகம், 1° (பிஞ்சம், ka), meurtre. 2° P. பிஞ்ஞகம்.

*பிஞ்சகன், (பிஞ்சகம்), meurtrier, le destructeur, i.e. Siven. [yeux.

*பிஞ்சடம், (pindjata), chassie des

*பிஞ்சம், 1° (pindja), meurtre, force, pouvoir plume. 2° (P. பிச்சம்), la plante சத்திக்கொடி.

*பிஞ்சரம், (pindjara), orpiment jaune, rouge foncé, - noirâtre, jaunâtre, or, cheval bai, cage, thorax.

*பிஞ்சலம், (pindjala), orpiment jaune, l'herbe தருப்பை, armée frappée de terreur panique.

*பிஞ்சனம், (pindjana), arc employé pour nettoyer le coton.

*பிஞ்சானம், pindjâna, or.

*பிஞ்சிகை, (pindjikâ), coton cardé, rouleau de coton préparé pour filer.

பிஞ்சு, 1° fruit à peine formé. 2° P. பிய்ஞ்சு. gér. de பிய்க்கிறது: — க்காய் fruit tout vert, - à peine formé; பிஞ்சைத்திருகுகிறது, — திருகிக்கொள்ளுகிறது tordre un fruit tout vert, l'arracher en le tordant.

*பிஞ்சூஷம், (pindjoûcha), cérumen des oreilles. [lampe.

*பிஞ்சூலம், (pindjoûla), mèche de

*பிஞ்சேடம், (pindjèta), chassie des yeux.

*பிஞ்சோலம், (pindjôlâ), bruit des feuilles et choses semblables.

பிஞ்ஞகம், cheveux tressés, coiffure. [chevelure tressée.

பிஞ்ஞகன், (பிஞ்ஞகம்), Siven à la

*பிடகம், 1° (pitaka), panier, corbeille, boîte. 2° (pidaka), pustule, bouton au visage. 3° aumône. 5° science, le système —, la loi de Bouddha.

பிடகன், 1° (பிடகம்), Bouddha. 2° (bhichak), médecin.

Digitized by Google

*பிடாரி, P. விடாரி, médecine à antidotes.

பிடங்கு, le dos d'un couteau, d'une épée ou d'un outil..., le coté opposé au tranchant ou à la pointe, le gros bout, culasse—, crosse de fusil: கட்டிப்—le pied ou le bas d'une lance: உலக்கைப்— manche du pilon: துப்பாக்கிப் —crosse de fusil; நாழிப்— fond de mesure à grains; பிடங்காவிடிக்கிறது frapper avec le pied d'une lance,—avec la crosse d'un fusil; பிடங்காற்போடுகிறது frapper avec le dos d'une épée.

*பிடம், 1° (pita), panier, corbeille (pour mettre du grain), boite, maracal ou boisseau, maison, cabane. 2° (pitha), peine, détresse. 3° P. புடம் creuset, purification des métaux.

*பிடரம், 1° (pithara), espèce d'herbe, cyperus rotundus, batte-à-beurre, pot, casserole. 2° P. பிடகம், bouton au visage: பிடரலவணம் espèce de sel noir.

பிடரி, la nuque, le derrière du cou, le dessus des épaules: பிடரிப்பூணிக்கடைப்புணர்வு agrafe d'un bijou de cou qui se joint sur la nuque: பிடரியைப்பிடித்துத்தள்ளுகிறது saisir par la nuque et pousser; பிடரியமடக்கிவிடுகிறது plier et casser le cou.

பிடர், (பிடரி), la nuque:— தலை le derrière de la tête; — ப்பிளவை espèce d'ulcère à la nuque.

பிடவம், பிடவு, dos, derrière, nom d'un arbrisseau.

பிடவை, P. புடவை, toile.

பிடாந்திரம், V. படாந்தரம்.

பிடாரம், science de la médecine: பிடாரச்சொல் (பிடாரம்), mot de médecine, mot nouveau.

பிடாரன், pl. பிடாரர், preneur de serpens (qui pour les prendre et guérir de leurs blessures a un revenu fixe sur la moisson), médecin, homme de la caste des குறவர்.

பிடாரி, — தேவி, la prétendue déesse—, Pidâri, forme inférieure de Kâli; பிடாரிக்குக்காப்புக்கட்டுகிறது attacher un cordon au bras de Pidâri au commencement de la fête du renouvellement de son mariage: பிடாரியைப்பெண்டாகைத்துக் கொண்டாற்போலிருக்கிறான் c'est comme s'il avait Pidâri pour femme, il a une femme aussi méchante que cette diablesse.

பிடாரிச்சி, fém. de பிடாரன், femme de preneur de serpens, —de la caste des குறவர், Couratti.

பிடி, 1° imp. et n. v. de பிடிக்கிறது, poignée, quantité qu'on peut prendre avec la main, pincée, manche, poignée, prise, saisie, capture, chasse, poignet, force, mesure de 4 doigts, argent comptant, confiance, cardamome, femelle de l'éléphant, du chameau, du yack, vache du Thibet, manière de châtrer par compression: எழுத்தாணிப்பிடி manche du stilet à écrire; — ஆடு bouc châtré; — காரர் chasseurs: — கொடுக்கிறது donner prise, lieu; —க்கட்டு petit paquet, poignée liée, de feuilles de palmier... liées ensemble; — க்கட்டுகட்டுகிறது lier par poignées, en petits paquets: ஓலைகளைப்—க்கட்டுகட்டுகிறது lier des ôles ou feuilles de palmier en paquets (pour écrire ensuite dessus); — க்கொம்பு cornes encore courtes; — க்கொழுக்கட்டை sorte de gâteaux; —சாவல் coq châtré, chapon; — சுட்டுப்படைக்கிறார்கள் (les gentils), font cuire de petits gâteaux d'une poignée de farine et les offrent aux pénates; — தண்டம் saisie injuste (d'un innocent...); — படுகிறது se prendre, être pris, saisi, arrêté, contenu, se borner, convenir, s'adapter: இந்தஸ்தலமெனக்குப் —படாது ce lieu ne me convient pas; — பாடு prise, être pris, se trouver, rapport, convenance, assemblage, richesse, ténacité, avarice; — பிடித்துக்கொள்ளுகிறது retenir, faire une retenue (pour quelque dette); — பிடியென்று நிற்கிறது insister, presser une affaire, litt. être à dire: prends, prends; — பிடியென்றுவருகிறது venir à la hâte, venir presser; — ப்பிட்டு es-

Digitized by Google

pèce de petits gâteaux;—மண் poignée de terre,—de sable—,de mortier épais (qu'on donne à divers personnes soupçonnées de vol,afin que celle qui a volé puisse restituer secrètement en mettent dedans l'objet volé; on délaie ensuite le tout dans de l'eau); நாணுன்வாயிற்—மண்போடுவேன் je fourrerai une poignée de terre dans ta bouche (injure); — யரிசி poignée de riz (qu'on donne *ou* réserve pour aumône...); — வெழுத்தாணி stylet à écrire qui a une poignée(et qui se plie).

பிடிகம், bracelet d'enfant.

பிடிக்கிறது,டித்தேன், டிப்பேன், டி,டிக்க,*v.a.* (பிடி),prendre, saisir, arrêter, empoigner, attraper,s'emparer, accaparer, tenir, contenir, lier,avaler, retenir, déduire, - des gages,défalquer,convenir,s'adapter, s'accorder, acquiescer, falloir, être nécessaire, s'appuyer, s'approcher, se serrer, chaponner (un coq), châtrer un animal,le feu prendre,(le foyer...) prendre feu, produire (des fleurs,des fruits) se nouer, attraper (un rhume...), soulever (un fardeau), coudre, raccommoder, calfater,finir, limiter, faire un vase de feuilles d'aréquier; குருவிளைப் — prendre des oiseaux; இந்தப்பதார்த்தமெனக்குப்பிடியாது ce mets ne me convient pas;மாட்டுக்குக்கால்பிடிக்கிறது châtrer un taureau: கால்பிடித்தசே ou சேங்கன்று jeune taureau châtré; பிடித்தபிடி la poignée prise, ténacité,tenir ferme, ne pas lâcher prise; பிடித்தபிடியை விடான் il ne lâche pas prise, il est ferme, tenace, attentif à son affaire; பிடித்திருக்கிறது, பிடித்துக்கொண்டிருக்கிறது avoir saisi,tenir,—ferme;—க்கொள்ளுகிறது saisir, prendre,attraper, empoigner; — க்கொண்டுபோகிறது saisir et emporter ou emmener; — க்கொண்டுவருகிறது saisir et apporter ou amener; குருவனைக் கைப்பிடியாய்ப் பிடிக்கிறது saisir quelqu'un, le prendre vivant, — par la main; பிடித்தகொம்பு மொடித்து மிதித்தகொம்பு முறிந்தாற்போலானேன் je suis comme si la branche à la quelle je me tiens et celle sur la quelle j'ai mis les pieds se rompaient, *i.e.* j'ai perdu tout appui, je suis sur le point de tomber dans un précipice.

பிடிச்சராவி,பிடிச்சுராவி,(பிடிச்சு,*P.*பிடித்து, அராவுகிறது), étau, —de forgeron.

பிடித்த,*part.de* பிடிக்கிறது.

பிடித்தம், (பிடித்த), suppression, retenue (sur les gages...),contravention à la coutume: - பிடிக்கிறது faire une retenue, rattraper une dette par des retenues sur les gages.

பிடித்தல்,*n.v.de* பிடிக்கிறது,prise, capture, saisie, action de prendre...

பிடித்து,*gér. du même*:பிடித்திராவி,பிடித்துராவி, étau,— de forgeron,.. (qui tient l'objet qu'on lime ou qu'on polit).

பிடிப்பிக்கிறது,ப்பித்தேன், ப்பிப்பேன்,ப்பி,ப்பிக்க, *v.caus. de* பிடிக்கிறது,faire prendre, — saisir...,châtrer par compression; பிடிப்பிக்க அறிந்தவன் celui qui sait châtrer —, qui châtre ainsi les taureaux. பிடிப்பித்தகடா,—மாடு bouc - , taureau châtré,—qu'on a fait prendre.

பிடிப்பு,*n.v.de* பிடிக்கிறது,saisie, prise. lien,nœud, attache, liaison, union, attachement, affection, support, suppression, contraction, convulsion; பிடிப்பாயிருக்கிறது être uni,adhérer,avoir de l'attachement, des spasmes, des convulsions; பிடிப்பானசிநேகம் solide amitié;கைகாற்பிடிப்பு contraction des mains et des pieds; இன்னுனுக்கவன்மேலே—மெத்த un tel a une grande affection pour lui; ஒருத்தனுக்காகப்பிடிப்பாய்ப்பேசுகிறது parler en faveur de quelqu'un.

பிடிமானம், (பிடி), attachement, affection, zèle, attrait, faveur, persévérance,ténacité,recherche,continence, tempérance, modération, parcimonie, économie, avarice,

Digitized by Google

avoir: — ஆயிருக்கிறது (avec மேல்), être attaché, affectionné, parcimonieux; — ஆய்ப்பேசுகிறது parler avec partialité; — இல்லாமற்செலவு பண்ணுகிறது dépenser sans économie, avec profusion; — வைக்கிறது s'attacher, s'affectionner, tenir en grande estime.

பிடியல், belle —, toile, bel —, habit.

பிடியன், (பிடி), chose qu'on peut prendre, *ou*

பிடியானை, (*id.*), éléphant femelle.

பிடியாள், (*id.*), personne prise ou amenée de force.

பிடிவாதம், (*id.*), obstination, ténacité, contention, dispute, — obstinée: — ஆய்க்கேட்கிறது demander avec importunité; பிடிவாதக்காரன் obstiné, disputeur. [obstinée.

பிடிவாதி, (பிடிவாதம்), personne

பிடுக்கு, testicule (mot immodeste), réceptacle des fleurs mâles —, spadix du palmier.

பிடுங்கி, *gér. et n.v. du suiv.* ayant arraché, qui arrache (à la fin des mots composés).

பிடுங்கு, *imp et part. de*

பிடுங்குகிறது, *sync.* பிடுங்கிறது, கினேன், குவேன், கு, க, *v.a* பிடுங்கல், பிடுங்குதல், *n.v. ou* பிடுங்கிப்போடுகிறது, arracher, tirer, extraire, ôter, enlever, dépouiller, extorquer, — adroitement, destituer, ôter un emploi: வேரோடே — déraciner, arracher avec les racines பிடுங்கித்தின்கிறது arracher et manger, (*v.g.* l'oiseau avec son bec), manger ce qu'on a arraché par importunité ou extorsion.

பிடுங்குண்டவன், (பிடுங்கு, உண்கிறது), homme destitué, dépouillé, privé de sa subsistance, victime de l'extorsion.

பிடுங்குண்ணி, (*id.* உண்ணி), homme qui vit de ses extorsions, — victime de l'extorsion.

பிடையன், *P.* புடையன்.

பிட்கிறது, பிட்டேன், பிட்பேன், பிள், பிட்க, *nég.* பிள்ளேன், *v.a. de* பிள்கிறது, *et* பிட்குதல், *n. v.* rompre, briser, casser, rompre un morceau de pain, de gâteau, de pierre...: அவர்கள்சினேகம் பிட்டாலும்பிட்கக்கூடாது bien qu'on rompît, *i. e.* qu'on s'efforçat de rompre leur amitié, on ne peut la rompre, elle est indissoluble: அவனுக்குமிவனுக்கும்பிட்டுக்கொண்டது il y a eu rupture ou différent entre celui-ci et celui-là; பிட்கப்படுகிறது se rompre, être rompu, பிட்டுக்கொடுக்கிறது rompre et distribuer.

*பிட்சா, *P.* பிக்ஷா; — சரம், — தானம், — பாத்திரம், *V. au mot* பிக்ஷா.

*பிட்சாகன், *P.* பிக்ஷாகன், mendiant.

*பிட்சாடனம், *P.* பிக்ஷாடனம்.

*பிட்சான்னம், *P.* பிக்ஷான்னம்.

*பிட்சை, *P.* பிக்ஷை, aumône, mendicité, quête, service, gage, salaire, *V. les composés au mot* பிச்சை.

பிட்ட, 1° *part. parf. de* பிட்கிறது. 2° *obl. de* பிட்டம்.

*பிட்டகம், 1° (pittaka), tartre —, saleté des dents 2° *P.* பிஷ்டகம்.

*பிட்டபம், *P.* பிஷ்டபம், le monde.

*பிட்டம், 1° *P.* பிஷ்டம். 2° *P.* பிருஷ்டம், le derrière, le dos, le postérieur. [லை.

பிட்டர், la plante ஆடுதின்னாப்பா

பிட்டல், *n.v. de* பிட்கிறது.

*பிட்டவத்தி, பிட்டவர்த்தி, *P.* பிஷ்டவர்த்தி

பிட்டவியல், (பிட்டு, அவியல்), espèce de gâteau cuit à la vapeur d'eau.

பிட்டி, (பிடம்), panier, corbeille.

பிட்டிலம், cardamome ou ஏலம்.

பிட்டு, 1° *P.* பிட்டம், collation, bouchée, farine de millet, — cuite à la vapeur d'eau et qui sert de gâteaux. 2° *gér. de* பிட்கிறது.

*பிட்டை, 1° *P.* பிஷ்டை, fiente d'animaux. 2° (பிட்ட), hernie, rupture du péritoine, ce qui produit une descente de boyaux: குதிரைப் — crotte de cheval; — யிறங்கினவன் homme qui a une hernie ou une descente de boyaux.

பிணக்கம், பிணக்கு, *n.v. de* பிணங்

குகிறது, discorde, fâcherie, désaccord, brouillerie, dispute, rancune, bouderie: பிணக்குதீர்க்கிறது terminer une discorde, réconcilier.

பிணக்கு, 1° V. பிணக்கம். 2° *imp. et part. de*

பிணக்குகிறது, க்கினேன், க்குவேன், க்கு, க்க, *v.a.* பிணக்கல், பிணக்குதல், *n.v.* lier, attacher.

பிணங்குகிறது, கினேன், குவேன், கு, க, *v.n.* பிணங்கல், பிணங்குதல், se fâcher, bouder, montrer de la mauvaise humeur, — de la répugnance, se brouiller, se quereller, se disputer, être mécontent, se serrer, s'embrouiller, être pressé, tressé, emmêlé, tourmenté, changer; பிணங்கிப்போகிறது s'en aller mécontent; தகப்பனோடே — த்திரிகிறான் il rôde —, il est en désaccord avec son père.

பிணம், cadavre, corps mort, carcasse, démon: — சுடுகிறது brûler un cadavre; — தின்னி mangeur de cadavres, un minéral qui dissout les chairs; — தின்னிப்பிச்சி démon qui se nourrit de cadavres; — விழ்களம், பிணக்காடு, *litt.* forêt de cadavres, champ de bataille, cimetière, lieu où l'on brûle les morts; — ப்பறை tambour funèbre; — வெடில் puanteur d'un cadavre.

பிணர், le cotonnier dit சோங்கு, rudesse, grossièreté, forme grossière, raboteuse.

பிணவறையன், (பிணம், அறை), homme qui a un gros corps.

பிணவு, பிணா, chienne, truie, femelle, — du yack, du sanglier, du cerf et autres animaux, femme.

பிணாரம், ce qui a un gros corps.

பிணி, 1° maladie, douleur, affliction, nom d'un démon, lien, attache, peigne de tisserand qui fait joindre les fils de la trame. 2° *imp. de* பிணிக்கிறது: பிணி-ரு, les 3 espèces de tempéramens, de maladies ou de causes de maladies: வாதம் flatuosité, tempérament mélancholique; பித்தம் bile, tempérament bilieux; சிலேட்டுமம் phlegme, tempérament phlegmatique: — க்குறை obsession ou persécution du démon; — ப்பேய் démon qui rend, dit-on, les enfans malades; — மிதிக்கிறது presser du pied la planchette qui fait manœuvrer le peigne du tisserand; — முகம் visage malade, oiseau en général, paon, cygne; — யோலை ôle —, feuille de palmier écrite de caractères magiques et qu'on s'attache pour se préserver des obsessions ou diable.) [bande.

பிணிகை, (பிணி), lien, ceinture.

பிணிக்கிறது, ணித்தேன், ணிப்பேன், ணி, ணிக்க, *v. a.* (பிணி), பிணித்தல், *n.v.* lier, attacher. [che.

பிணிப்பு, *n. v. du préc.* lien, atta-

பிணியாளன், பிணியாளி, (பிணி, ஆளன், ஆளி), malade, maladif.

பிணை, 1° cautionnement, caution, gage, sureté, garant, équivalent, lien, attache, bande, guirlande, — de fleurs, désir, consentement, agrément, cerf, jument, ânesse, chienne, truie, femelle du chameau, du yack, du cerf, de l'éléphant. 2° *imp. et part. de* பிணைகிறது. 3° *imp. et n.v. de* பிணைக்கிறது: உரொக்கப் — caution pour argent; நபர் — caution personnelle, pour la personne, pour se présenter; — கட்டுகிறது lier ensemble; — காரன், — க்காரன் caution, répondant; — சொல்லுகிறது, — சொல்லிக்கொள்ளுகிறது être caution, cautionner, répondre pour quelqu'un; — படுகிறது, — ப்படுகிறது se rendre caution, répondre pour, entrer dans une convention, dans une ligue; — மாடு V. பிணையல்மாடு; — வடிக்கிறது lier, — les bœufs en rang pour battre le blé en le foulant aux pieds; — நடக்கிறது, — வருகிறது (les bœufs) tourner en rond pour battre la moisson; — வைக்கிறது mettre —, donner pour caution.

பிணைகிறது, ணைந்தேன், ணைவேன், ணை, ணைய, *v. n.* (பிணை), பிணைதல், *n.v.* s'attacher, se lier, s'unir, se joindre, se mêler, s'accoupler.



Digitized by Google

பிணைக்கிறது, ணைத்தேன், ணைப்பேன், ணை, ணைக்க, *v.a. du préc.* lier, attacher, — ensemble, atteler, lier des bœufs en rang (pour battre la moisson...), joindre, unir: பிணைத்துவிடுகிறது attacher les bœufs; பிணைத்தோட்டுகிறது attacher les bœufs ensemble en rang et les faire marcher pour fouler la moisson; ஒருவன்மேலில்லாதும் பொல்லாதும் பிணைக்கிறது réunir sur le compte de quelqu'un des accusations fausses et méchantes; அற்றஇழையைப் — rejoindre —, nouer un fil rompu; ஒருவன்மேலே பொய்களைப் — forger des mensonges contre quelqu'un; ஒருவன்மேல் பொல்லாப்பைப் — causer du mal à quelqu'un.

பிணைத்தல், பிணைப்பு, *n.v. du préc.* action de lier..., attache, lien, ligature, union combinaison.

பிணையல், *opt. et n.v. de* பிணைகிறது, assemblage, enchaînement, liaison, guirlande, - tressée, — multiple, — composée de plusieurs réunies ensemble, bœufs liés ensemble, couple, gond, pivot (de porte...), charnières de boite; — அடிக்கிறது, *V.* பிணையடிக்கிறது; — ஆணி, *V.* கோவையாணி; — மாடு bœuf attaché à un autre par une corde, *ou* — ஆடினமாடு bœuf qui foule ou a foulé la moisson. On en attache ensemble 5 ou d'avantage par une corde; celui qui est à l'extérieur, et fait le plus grand cercle, s'appelle கோடியன்; celui qui est à l'intérieur s'appelle உள்ளன்: பிணையலோடே ஓட்டுகிறது, *V.* பிணைத்தோட்டுகிறது.

பிணையாளன், பிணையாளி, (பிணை, ஆளன், ஆளி), caution, garant, répondant.

பிணைவு, *n.v. du même*, jonction, union, liaison, connexion, accouplement. [2° *obl de* பிண்டம்.

பிண்ட, 1° *part. parf. de* பிளகிறது.

*பிண்டகம், (பிண்டம், ka), parfum, fumée odoriférante, démon, lutin, fantôme.

*பிண்டகன், (*id.*), celui qui fait les oblations aux ancêtres.

*பிண்டசன், (pindasa), mendiant, — qui vit d'aumônes.

*பிண்டதன், (பிண்டம், da *qui donne*), celui qui fait des offrandes de gâteaux... aux ancêtres, proche parent, protecteur, bienfaiteur, patron.

*பிண்டம், (pinda), corps, embryon, fétus, globe, boule, balle, masse, — ronde, amas bloc, bouchée, repas, nourriture, chair, viande, subsistance, moyens de vivre, oblation aux mânes des ancêtres. (Les Indous leur présentent de l'eau, des gâteaux, des boulettes de riz mêlé de lait avec des fleurs), parfum, substance odoriférante, myrrhe, encens, sucre candi, riz cuit, beurre frais, rose de Chine, fer, force, total ou somme (en arithmétique), la 21me parties de 90 degrés ou 3° 45', côte au dessous de l'aisselle, portique (devant une maison), aumône, foule, multitude; பிண்டமுந்துண்டமுங்கொடுக்கிறது *ou* நேர்கிறது fournir la nourriture et le vêtement; பிண்டம்பிடிக்கிறது mettre en boulettes; — விழுகிறது, — விழுந்துபோகிறது avorter, le fétus périr et tomber; — வெளியாகிறது le fétus devenir perceptible, l'enfant naître; — வைக்கிறது, வைத்தல் fair une offrande aux ancêtres; பிண்டகருமம் offrande aux ancêtres; — சருமம்பண்ணுகிறது *ou* பிண்டப்பிரதானம்பண்ணுகிறது faire une telle offrande. (pour cela on place sur 2 lignes au sud et au nord 3 boules de riz cuit de chaque côté, après quoi l'épouse de celui qui fait cette offrande reçoit l'ordre de prendre celles du milieu et de les manger, ce qu'on exprime par le mot பிண்டம் விழுங்குகிறது); — காப்பு le soutien du corps, nourriture, riz cuit; — கோசம் gomme odoriférante; — சூத்திரம் règle pour les additions; — ச்சோறு riz cuit offert ou à offrir aux ancêtres: பிரியமில்லாதசோறு — ச்சோறு du riz cuit désagréable

Digitized by Google

est comme celui qu'on a offert aux morts, ou le riz cuit offert aux mort est une nourriture désagréable: —தானம்,—நிர்வபனம் offrande de gâteaux funèbres: — தைலகம் encens; — பாதம் l'animal dont le pied est une masse de chair, *i.e.* l'éléphant: —புஷ்பம் fleur de —, l'arbre அசோகு, rose de Chine; — பலை gourde amère, — ப்பிரதானம் offrande —, oblation aux ancêtres: — ப்பிரசாதம் nourriture des ancêtres: —ப்புறனடை exception de règle de calcul; —ப்பொருள் objet amoncelé, accumulé, additionné, — matériel, corporel; —மூலம், —மூலகம் carotte, daucus carota.

*பிண்டலம், பிண்டனம், (pindala, —na), digue, chaussée, pont.

*பிண்டாசன், பிண்டாசனன், பிண்டாசி, (பிண்டம், அசனம், asa, asi *qui mange*), mendiant, — vivant d'aumône. [le corps et le monde.

*பிண்டாண்டம், (*id.* அண்டம்),

*பிண்டாப்பிரம், (*id.* அப்பிரம்), nuage à globules, grêle.

*பிண்டாயசம், (*id.* அயசம்), acier.

*பிண்டாரன், (pindâra), berger, vacher, gardien de buffles, mendiant.

பிண்டாரி, Pindari, voleur armé: பிண்டாரிகள் les Pindaris, les maraudeurs, ceux d'un camp qui vont au pillage.

*பிண்டி, 1° (pindi), moyeu de roue, mendiant, qui offre l'oblation aux mânes. 2° l'arbre அசோகு uvaria, foule, troupe, assemblage, total, farine, — de millet, — de riz, gâteau de grains broyés, la 7me constellation dite புனர்பூசம், chose entassée, additionnée, arrondie. 3° *imp. de* பிண்டிக்கிறது.

*பிண்டிகை, (பிண்டி, kâ), moyeu de roue, siége, —de diverses formes, cou-de-pied.

பிண்டிக்கிறது, டித்தேன், டிப்பேன், டி, டிக்க, *v.a.* பிண்டித்தல், *n.v.* (பிண்டம்), faire —, former une boule, un globe, arrondir, amonceler, accumuler, additionner, rassembler.

*பிண்டிதம், (pindita), multiplication, addition, numération, collection, amoncellement. [பிந்தபாலம்.

*பிண்டிபாலம், பிண்டிவாலம், *P.*

*பிண்டிலம், (pindila), pont, digue, chaussée. [reur d'horoscopes.

*பிண்டிவன், (*id.*), astrologue, ti-

பிண்டிவாளகம், l'arbre குந்துருக்கம் qui donne l'encens.

*பிண்டிகாணம், பிண்டிகரம், பிண்டிகிருதம், பிண்டிபூகம், (பிண்டம், *i augment*), mettre en boule, en rond, en balle, additionner, faire la somme. [fanfaron efféminé.

*பிண்டிசூரன், (*id.*), jocrisse.

*பிண்டிதகம், (pinditaka), l'arbrisseau மருக்காரை, tabernæ montana coronaria.

*பிண்டிரம், pindira), manque de suc, grenade, os de sèche.

பிண்டு, *gér. de* பிள்கிறது: — போகிறது se briser, se fendre, se crever; பிண்டிருக்கிறது être brisé, — fendu; அவன்கையோடே —போயிற்று (le vase) s'est brisé dans sa main ou avec sa main; — விழுகிறது se briser et tomber. [immodeste).

பிண்டை, (பிண்டு), vulve, (mot

பிண்ணாக்கு, (பிண்ணியாகம்), grains (de sésame et autres grains), pilés ou broyés, gâteau fait de ces grains pilés, — broyés ou du marc de ces grains (dont on a extrait l'huile): — க்கீரை l'herbe potagère melochia corchorifolia: — ப்பூண்டு la plante corchorus æstuans; — மாடன் insensé, benêt.

*பிண்ணியாகம், (pinyâka), marc de grains dont on a extrait l'huile, gâteau qu'on en fait. [ d'Indiren.

*பிதகம், (bhidaga), épée, foudre,

பிதரம், (vidara), action de déchirer, de fendre.

பிதளை, vase à l'huile.

பிதற்றல், *opt. et n.v. de* பிதற்றுகிறது, babillage, paroles extravagantes, — de délire, bruit de paroles.

பிதற்று, paroles extravagantes, — de délire, babillage, babil, — d'enfant, *imp. et part. de*

Digitized by Google

பிதற்றுகிறது, ற்றினேன், ற்றுவேன், ற்று; ற்ற, *v.a.* பிதற்றுதல், *n.v.* babiller, jaser, bredouiller, parler sans cesse, sans raison, — en délire, — en insensé, extravaguer, déraisonner. பிதற்றிக்கொண்டுதிரிகிறது courir çà et là babillant en insensé: இருக்குநாலு வேதமு மெழுத்தை யறவோதினும், பெருக்கநீறு பூசினும் பிதற்றினும் பிராணிநான், quand tu réciterais sans faute les 4 vèdas à commencer par l'iroukou, que tu te barbouillerais entièrement de cendres et que tu ne ferais que babiller (en récitant des mandirams). Dieu n'est pas avec toi.

*பிதா, 1° (pitâ), père, Dieu, (et en style païen) Arougûen, Brama, Sivan. 2° gros héron, *pl.* பிதாக்கள் les pères, les ancêtres; — த்துவம் paternité; — ப்பிதா grand-père, patriarche (de l'ancienne loi, ou fondateur d'ordre religieux); — ப்பிதாக்கள் les ancêtres, les patriarches; — மகன் (maha *grand*), grand-père, grand-père paternel, Brama; — மகி, (*id.*), grand mère maternelle. Dans les mots composés on emploie le radical pitrou altéré en பிதர் ou பிதுர்.

*பிதி, பிதிரம், (bhidi, bhidira), foudre, — d'Indiren.

பிதிகம, *V.* பெருங்குருமை.

பிதிர, பிதிரும், பிதிரா, பிதிராத, *inf part. fut.part.nég.de* பிதிர்கிறது.

பிதிரு, 1° (pitrou), père. *pl.* பிதிருக்கள், ancêtres, mânes. 2° *imp.et part.de* *பிதிருகிறது, *V.* பிதிர்கிறது.

*பிதிர், 1° (*P.* பிதிரு), père, ancêtre, — paternel, mânes. *pl.* பிதிர்கள், les ancêtres, les mânes des ancêtres, (ordinairement ce mot précède un nom et prend le sens du génitif.) 2° conte, récit de bataille, instant, claquement des doigts, goutte d'eau, pollen des fleurs. 3° *imp.et part.de* பிதிர்கிறது: — ஆசாரம் offrande —, sacrifice aux ancêtres; — ஆட்சணை, — ஆர்ச்சனை, — ஆர்ச்சிதம் patrimoine, bien qui vient des ancêtres; — உலகம் le monde des ancêtres ou des mânes (selon les Indous); — எகியம் sacrifice —, oblation aux mânes des ancêtres divinisés; — கடன், — கருமம், — காரியம் obsèques, cérémonie funèbre, — pour les ancêtres décédés ou en leur honneur; — கணம் diverses classes d'ancêtres fils des Richis *ou* பிரசாபதிகள்; — காலம் temps censé propre (selon les Indous) aux cérémonies du சிராத்தம், depuis le 18me jusqu'au 24me நாழிகை; — காரணம் cimetière, lieu où l'on brûle les morts; — கிரியை, *V.* பிதிர்கடன்; — க்காதகம் parricide, meurtre de son père: — க்காதகன் patricide, meurtrier de son père; — க்கிரகம் maison des mânes, *i.e.* cimetière où l'on brûle les morts; — சந்ததி parenté —, lignée paternelle, *ou* — சனம் ancêtres, ayeux; — சாமான்னியர், — சாமான்னியம் les ancêtres; — சிராத்தம் cérémonies funèbres —, obsèques d'un père: — சுவசிரு, (svasrou *sœur*), sœur du père, tante paternelle; — சுவசிரீயன், (*id. iya*), fils de la tante paternelle: — சுவசிரீயை, (*id.*), fille de la tante paternelle; — ஸ்தானம் demeure des mânes: — ஸ்தானன், — ஸ்தானியன், (ஸ்தானம், iya), tuteur, remplaçant du père; — தரிசி esprit familier: — தருப்பணம், — தர்ப்பணம் sacrifice —, offrande aux ancêtres, le bas de l'index, partie de la main entre le doigt du milieu et le pouce que les Indous disent consacrée aux mânes; — தானம் don en l'honneur des ancêtre; — திதி jour consacré aux mânes, *i.e.* le jour de la nouvelle lune; — தீர்த்தம் le bas de l'index, partie de la main entre l'index et le pouce consacrée aux mânes (au dire des Indous), la ville de Gayâ ou கயை où les sacrifices funèbres sont censés avoir un mérite particulier: — தேவர் les prétendus dieux mânes qu'on dit habiter le sud ou le royaume de Yâmen; — தேவதை chef de famille ou de caste —, ancêtre censé déifié. Les Indous en comptent trois nom-

Digitized by Google

més பிதிதேவதைகள் formés par Brama, et résidans dans le monde de Yamen, où ils reçoivent, disent-ils, les âmes des morts: ce sont comme les 3 juges des enfers des Grecs: ils reçoivent tous les ans certains hommages et se nomment aussi தென்புலத்தார்; — தைவதம் la 10me constellation lunaire dite மகம்; — த்துரோகம் trahison envers son père envers ses ancêtres, manquement aux cérémonies funèbres; — த்துவம், — தன்மை paternité, condition des mânes; — நாள் le jour consacré aux morts ou aux ancêtres, l'anniversaire de leur décès, la nouvelle lune, la constellation மகம்; — பதம் la prétendue demeure des mânes, *i.e.* le sud; — பதி le prétendu roi des morts, ou des mânes, *i.e.* Yamen; — பத்தி piété filiale, — envers son père ou ses ancêtres, exactitude à remplir les devoirs funèbres; — பந்து parenté du côté paternel; — பாந்தவன் parent du côté paternel; — பாத்திரம் vase employé aux obsèques; — பிண்டம் nourriture offerte aux morts; — பிதிர் grand-père, grand père paternel; — புண்ணியகாலம் temps censé propre aux vertus en l'honneur des ancêtres, *V.* பிதிர்காலம்; — பூசை sacrifice aux mânes; — போசனம் nourriture offerte aux mânes, nourriture de son père; — ப்பிரகு mère du père, crépuscule du soir, temps où, au dire des Indous, les mânes sortent de leur demeure; — ப்பிராதிரு frère du père, oncle paternel; — மந்திரம் demeure paternelle, — des ancêtres ou des mânes, sépulcre, tombeau; — மாதுருகாதகன் parricide, meurtrier de ses père et mère; — மேதம் rites funèbres, obsèques; — யாக்கியம், — யாகம் sacrifice aux ancêtres, obsèques; — யானம் le prétendu char des mânes dit விமானம் (pour les conduire de la terre au ciel): — லோகம் le monde des mânes: — வசதி demeure de ancêtres, *V.* பிதிர்வனம்; — வசனம் parole des ancêtres: — வழி généalogie des ancêtres, parenté du coté paternel; — வழியாய்ப்போகிறது suivre la voie — la conduite de ses ancêtres; — வனம் cimetière, lieu où l'on brûle les morts; வனேசரன், (வனே *abl. sanscrit de* வனம், சரன் *qui va*), Siven, démon qui hante les cimetières; — வாக்கியம் parole des ancêtres; — வாக்கியபரிபாலனம் observance des paroles des ancêtres; — வித்தைக்காரகுடிச்சாத்தி esprit familier; — விரதம் adoration des mânes, *V.* பிதிர்ருமம்; — விரதன் adorateur des mânes.

பிதிர்கிறது, ர்த்தேன், ர்வேன், ர், ர, *v.n.* பிதிர்தல், *n. v.* se réduire en farine, *v.g.* des pommes de terre cuites, s'en aller —, tomber en morceaux, en lambeaux, tomber, se répandre, se dissiper: சீலைபிதிர்ந்துபோகிறது un toile s'en aller en lambeaux.

பிதிர்க்கிறது, ர்த்தேன், ர்ப்பேன், ர், ர்க்க, *v.a. du préc.* பிதிர்த்தல், *n. v.* faire tomber, dissiper, répandre.

பிதிர்வு, *n.v. de* பிதிர்கிறது, chute, dispersion.

*பிது, (bhidu), foudre, — d'Indiren.

பிதுகம், couleur de nénuphar, ce qui est un défaut des pierreries.

பிதுக்கம், *n.v. d* பிதுங்குகிறது, saillie, bossage, ce qui avance en dehors, ouvrage en relief, expression du pus en pressant, bruit d'une chose qui crève: — ஆயிருக்கிறது avancer en dehors, faire saillie, être exhaussé, — en relief: — ஆனவேலை ouvrage en bosse, relief.

பிதுக்கி, qui fait saillie, qui avance en devant (dans les mots composés): உருபிதுக்கி lippu, homme à grosses lèvres, *n.v. et ger. de*

பிதுக்குகிறது, க்கினேன், க்குவேன், க்கு, க்க, *v.a. de* பிதுங்குகிறது *et* பிதுக்கல், பிதுக்குதல், *n. v. ou* பிதுக்கிப்போடுகிறது, exprimer —, faire sortir en pressant (le noyau d'un fruit, le pus d'un furoncle...), enfler une vessie, enfler —, bouffir les joues, faire en saillie, — avancer

Digitized by Google

en dehors, bomber: உதட்டைப் — avancer la lèvre inférieure en dérision.

பிதுங்குகிறது, கினேன், குவேன், கு, க, v.n பிதுங்கல், பிதுங்குதல், n. v. et பிதுங்கியிருக்கிறது, faire saillie, avancer en dehors, faire bosse, être bombé, se bomber, être exprimé (en pressant), se gonfler, crever, faire explosion: பிதுங்கவிடுகிறது mettre en saillie (une brique...): விழப்பிதுங்குகிறது un mur se bomber ou s'incliner, menacer de tomber.

*பிதுரம், (bhidoura), foudre, tonnerre.

*பிதுர், P. பிதிர், mânes, ancêtres: —சனம், les pères, les ancêtres.

பித்தகம், couleur de perroquet, ce qui est un défaut des pierreries.

*பித்தம், (pitta), bile (une des 3 espèces de பிணி ou de maladies), humeur bilieuse, étourdissement, délire, trouble d'esprit causé par la bile, espèce de danse, farce: — ஊறுகிறது, V. பித்தேறுகிறது; — பிடித்தவன் homme en délire: —மிஞ்சுகிறது la bile dominer; பித்தகாசம் phthisie bilieuse; —காமாலை jaunisse bilieuse; — க்காய்ச்சல் fièvre bilieuse: —காங்கை, —காரகம் chaleur causée par la bile; — காரகத்தினாலே ou பித்தசோவையினால் முகங்குளுகுளுத்திருக்கிறது la figure être enflée par l'effet d'une indisposion bilieuse; —காலம் temps de bile, — où la bile domine: — குன்மம் obstruction causée par la bile, maladie bilieuse: — க்கிராணி diarrhée causée par la bile: — க்கிறுகிறுப்பு tournoiement de tête —, vertige causé par la bile; — சரீரம் tempérament bilieux, corps où domine la bile; —சாந்தி adoucissement ou remède à la bile, la plante பொன்னாங்காணி; —சிலேட்டுமம், —சிலேற்பனம் phlegme mêlé de bile: — சுரம் fièvre bilieuse: —சூடு, V பித்தகாரகம்; —சூலை maladie arthritique bilieuse; — சோகை, —சோவை espèce d'enflure avec chaleur causée par la bile, V. பித்தகாரகம்; — ச்சுழற்சி vertige causé par la bile; — நரை cheveux gris prématurés, cheveux que la bile ou la maladie ont fait grisonner; — நாடி pouls bilieux, pouls du doigt du milieu; — நீர் eau qui vient de la bile; — பாண்டு, — பாண்டுரு jaunisse causée par la bile; —ப்பிளப்பு crevasses ou gerçures que la bile cause aux pieds et aux mains; —மயக்கம் vertige —, étourdissement causé par la bile, folie, délire; —ரத்தம் V. இரத்தபித்தம்: — ரோகம் maladie bilieuse tempérament bilieux, une des 3 espèces de பிணி ou de maladies; — வாயு flatuosité bilieuse qui vient d'échauffement ou de chaleur: —ஆறல், V. பித்தேறுகிறது; —வெடிப்பு V. பித்தப்பிளப்பு; பித்தத்தின்வீடு le siége de la bile, e.i. l'estomac.

பித்தரிக்கம். fanfaronnade, vaine ostentation.

பித்தலாடகம், P. பித்தளையாடகம்:

பித்தலாட்டம், sync. du préc. tromperie, supercherie, duperie, contrefaçon, tours, mensonges.

பித்தல், pioche, instrument pour couper et creuser, bord, extrémité, proximité, manche d'instrument, V பிடங்கு.

*பித்தளை, (pittala), airain, bronze, composition de cuivre et d'étain, cuivre, —jaune, laiton: — க்கொடி drapeau de cuivre, i.e. girouette; — மணி grains de bronze; — மலை montagne contenant du cuivre; — யாடகம், (ஆடகம்), tromperie, duperie duperie par laquelle on fait passer du cuivre pour de l'or ou de l'argent; —யாடகம் ou பித்தலாடகம்பண்ணுகிறது faire passer du cuivre pour de l'or, duper, tromper, contrefaire, jouer des tours.

*பித்தன், (பித்தம்), fou, homme en délire, — à qui la bile a tourné la tête, voleur, vaurien, Siven, Vaïraven, autre forme de Siven, pl. பித்தர், பித்தர்கள் les fous: பித்தனுக்குத் தன்குணம் நூலிலுஞ்செவ்வை le fou croit son naturel — son état plus

régulier ou plus droit qu'un cordeau tendu, *i.e.* se croit en bon état.

*பித்தாதிசாரம், பித்தாதிக்கம், (பித்தம், அதிசாரம், ஆதிக்கம்), exubérance —, excès de bile: பித்தினால் அவன் பித்தாதிக்கத்தைத் தெளிவடைந்தது le sommeil a dissipé ou calmé son excès de bile. [coléra-morbus.

*பித்தாதிசாரம், (*id.* அதிசாரம்), பித்தாந்தலைக்கொட்டி, la plante crotolaria verrucosa.

*பித்தி, 1° (bhitti), mur (de terre ou de maçonnerie), refuge, asyle, morceau, fragment, part, fente, fissure. 2° *V.* பித்தி: — சௌரன் voleur qui perce les murs.

*பித்திகை, (பித்தி.kâ), mur, le lézard domestique dit பல்லி, l'arbrisseau சிறுசண்பகம்: பித்திகாமார்ச்சாலநியாயத்திர்ப்பு jugement du lézard et du chat, *i.e.* jugement douteux.

பித்து, (பித்தம்), fiel, bile, humeur, — bilieuse, délire, folie, amour excessif, colère: — கொள்ளுகிறது devenir fou; — ப்பை vessie du fiel, — où il est renfermé; பித்தாய்த்திரிகிறது courir çà et là —, rôder comme un fou, — par l'effet de la folie; பித்தாய்ப்பிதற்றுகிறது *ou* பினற்றுகிறது extravaguer, déraisonner par folie *ou* délire; être fou ou en délire; அதுதானவனுக்குப்பித்தாய்ப் பிடித்திருக்கிறது c'est là l'objet de sa folie, ce qui l'a pris comme une folie.

பித்தேறுகிறது, (பித்து, ஏறுகிறது), la bile monter à la tête, se mettre en colère.

பித்தை, cheveux d'homme. [teur.

பித்வி, (*arabe*), humble —, servi-

*பித்தபாலம், (bhindapâla), trait qu'on lance, — court qu'on lance à la main *ou* par un tube.

பித்தி, *gér. de* பித்துகிறது.

பித்தின், பித்திய, *part. du même*; பித்தின *ou* பித்தியவன் le soir; பித்தினவன் le dernier, le suivant, celui qui est ou vient derrière.

*பித்து, *P.* வித்து, zéro, ou petit point rond qu'on met sur les simples consonnes.

பித்துகிறது, தினேன், துவேன், து, ற, *v.n.* பித்தல், பித்துகை, பித்துதல், *n.v.* (பின்), suivre, venir —, être derrière ou après, retarder, lambiner: பித்திப்போனகாரியம் affaire retardée; — வருகிறது venir derrière

*பிபாசை, (pipâsa), soif [ou après.

*பிபாசிதன், பிபாசு, (pipâsita, pipâsou), altéré, qui a soif.

*பிபிதகி, (pipitaki), le 12 du mois de வைகாசி, c'est alors un mérite de donner de l'eau.

*பிபிலவாதம், *V.* பைபிலவாதம்.

*பிபிலகம், (pipilaka), grosse fourmi noire.

*பிபிலிகை, (pipilikâ) fourmi, la petite fourmi rouge commune: பிபிலிகா நியாயத்திர்ப்பு jugement de la fourmi, *i.e.* jugement équitable.

*பிப்பலகம், (pippalaka), mamelon, téton, fil à coudre.

*பிப்பலம், (pippala), l'arbre அரசு ou sorte de peuplier, nom d'un oiseau, eau, manche d'habit.

*பிப்பலி, பிப்பிலி, (pippali), poivre long dit திப்பிலி: — மூலம் racine de poivre long; — யத்தி la plante பெருநெருஞ்சில். [tre des dents.

*பிப்பிகை, (pippikâ), saleté —, tar-

*பியை, (bhiyâ), crainte.

பிய்கிறது, ய்ந்தேன், *ou* ய்ஞ்சேன், ய்வேன், ய், ய்ய, *v.n.* ய்யேன், *nég. et* பிய்ந்து *ou* பிய்ஞ்சுபோகிறது, se déchirer, s'user, s'en aller en lambeaux, (une toile...) être mis en pièces, se rompre, se fendre.

பிய்க்கிறது, ய்ந்தேன், ய்ப்பேன், ய், ய்க்க, *nég.* ய்க்கேன், *v.a. du préc. et* பிய்ந்து *ou* பிய்ச்சுப்போகிறது, déchirer, lacérer, rompre, mettre en pièces (une toile, une corde...), fendre carder —, nettoyer le coton: பிய்க்காமல்வைக்கிறது mettre sans déchirer; பிய்க்காதே ne déchire pas. [து.

பிய்கை, *et* பிய்தல், *n. v. de* பிய்கிற

பிய்ச்சல், *P.* பிய்த்தல் *et* பிய்ப்பு, *n. v. de* பிய்க்கிறது, déchirure, lacération, rupture, action de déchirer...

பிய்ச்சு, *P.* பிய்த்து, *gér. du même.*

*பிர, (pra), particule sanscrite, pré-

Digitized by Google

fixe d'un grand nombre de mots, qui marque apparence, abondance, excellence, hâte ou mouvement progressif et correspond aux prépositions latines *pro* et *præ*.

*பிரசம், (prakasa), meurtre, action de tuer.

*பிரசனம், (prahasana), sarcasme, reproche, satire, chanson satirique, — injurieuse, *ou* [rire, joie.

*பிரசிதம், (prahasita), éclat de

*பிரஸ்தம், (பிர, அஸ்தம்), main étendue.

*பிரஸ்பதி, *V.* பிரகர்ப்பதி.

*பிரகடம், பிரகடிதம், பிரகடீகரணம், பிரகடீகிருதம், (prakata, ita, i *augment*), manifestation, exposition, développement, publicité, évidence.

*பிரகணம், (praghana), massue de fer, vase de cuivre, terrasse couverte —, cour devant une maison, chose ébranlée. [ne.

*பிரகணேமி, (prahanêmi), la lu-

*பிரகண்டம், (பிர, கண்டம்), haut du bras (du coude à l'épaule), le devant de l'épaule. [ரண்ணியம்.

*பிரகதாரண்ணியம், *P.* பிருகதா

பிரகதி, la plante கத்தரி, bringelle, ou aubergine.

*பிரகத்வாதம், பிரகத்வாயு, (vrouhat *grand*), espèce de maladie ou de flatuosité.

*பிரகமனம், (பிர), discussion, dispute, progrès, avancement, détermination.

*பிரகம்பம், (பிர), tremblement.

*பிரகம்பனம், (*id.*), vent, air, enfer, *ou*

*பிரகம்பிதம், (*id.*), mouvement, tremblement: பிரகம்பிதமுகம் léger mouvement de tête causé par l'admiration.

*பிரகரணம், 1° (*id.*), chapitre, section, division, portion, préface, prélude, introduction, endroit de pause, fin d'article. 2° (praharana), arme, guerre, bataille, char couvert pour les femmes. 3° opportunité, occasion.

*பிரகரம், 1° (பிர), secours, aide, tas, monceau, honneur, respect, bien, fertilité, bouquet de fleurs, l'arbre odoriférant அகில் agalloche. 2° (prahara), *V.* பிரகரம்.

*பிரகருசம், பிரகருஷம், 1° (prakarcha), excellence, abondance. 2° (praharcha), joie, délice, plaisir.

*பிரகருஷணம், 1° (prakarchana), extraction, labourage, excellence. 2° (praharchana), joie, plaisir.

*பிரகர்ப்பதி, பிரகற்பதி, *P.* விருகஸ்பதி, Vrouhaspati, fils d'அங்கிரன் prétendu gourou des dieux indous et régent de la planète Jupiter avec laquelle on l'identifie, nom d'un sage ou législateur indien, auteur du code dit பாரகஸ்பத்தியம்: பிரகர்ப்பதிசக்கரம் le cycle de 60 ans.

*பிரலாதன், (prahlâda *joie*), Prahlâden, fils d'Hiranyakchen (réputé pieux).

*பிரகற்பன், (pragalbha), homme hardi, audacieux, prompt, énergique, éminent, illustre, fort, prince.

பிரகாசத்தி, (பிரகாசம்), talc, mica.

*பிரகாசம், (prakâsa), lumière, — réfléchie, lustre, splendeur, (une des 4 propriétés des corps glorieux et des prérogatives des immortels), clarté, — du soleil, publicité, manifestation, célébrité, extension, explication, ressemblance, rire, sourire, métal de cloche, bronze, (en langage dramatique) à haute voix, *V.* பொருமல்: பிரகாசமானம் *ou*

*பிரகாசனம், (பிரகாசம், na), lumière, illumination, rendre clair.

*பிரகாசன், (பிரகாசம்), Louis, Lucius.

பிரகாசி, (*id.*), *m. f.* qui brille, radieux, *ou* பிரகாசியம்மாள் Lucie, Louise.

பிரகாசிக்கிறது, சித்தேன், சிப்பேன், சி, சிக்க, *v. n.* (பிரகாசம்), பிரகாசித்தல், *n. v.* briller, luire, resplendir, éclairer, être clair, devenir —, être célèbre.

பிரகாசிக்குதல், பிரகாசிப்பு, *n. v. du préc.* splendeur, éclat.

Digitized by Google

பிரகாசிப்பிக்கிறது, *v.caus.du même*, faire briller, illuminer.

*பிரகாசிதம், (பிரகாசம், ita), évidence, visibilité, publication.

*பிரகாண்டம், (prakânda), branche, pieu, tronc d'arbre, excellence.

*பிரகாபணம், (prahâpana), renvoi, expulsion.

*பிரகாமியம், 1° (பிர, காமம், ya), plénitude, accomplissement de ses désirs. 2° *P.* பிராகாமியம்.

*பிரகாரணம், (prahârana), largesse, don, — désirable,

*பிரகாரம், 1° (prakâra), manière, mode, sorte, espèce, voie, chemin, différence, particularité, adjectif, mot qu'on ajoute à un nom. 2° (prahâra), blesser, tuer. 3° *P.* பிராகாரம், mur, — d'enclos, rue de temple. ., rue qui entoure un temple; ஒரு — une manière, d'une manière, d'une façon quelconque; இன்னபிரகாரமாய்க்கொடுத்தான் il a donné ainsi, il a vendu à ce prix.

*பிரகி, (prahi), puits.

*பிரகிதம், (prahita), chose envoyée, placée, destinée, ordonnée, dirigée, lancée, sauce, ragoût.

*பிரகிருஷ்டம், பிரகிருட்டம், (prakrouchta), chose supérieure, principale: பிரகிருஷ்டத்துவம், — தை supériorité, éminence.

*பிரகிருதம், (பிர), ce qui a été fait: பிரகிருதபிரளயம் destruction du monde.

*பிரகிருதி, (*id.*), nature, matière, cause passive et matérielle du monde (en philosophie, et en mythologie, et selon d'autres), cause négative d'existence, volonté personnifiée de l'être suprême, dont on fait une déesse identifiée en மாயை ou illusion et qu'on regarde comme le principe du monde, état —, naturel, condition d'une chose, racine d'un mot, mot —, radical, cause, origine, chose principale, soutien, fondement, les 5 élémens pris collectivement, femme, mère, organe mâle ou femelle de la génération, animal, stance sanscrite de 4 vers chacun de 21 syllabes, coefficient donné (en arithmétique), tempérament ou prédominence d'une des 3 humeurs (en anatomie), choses requises pour l'administration royale, (on en compte 7 dites அரசாட்சிக் குரியவுறுப்பேழு, savoir: அரசன் roi, மந்திரி ministre, நட்பாளர் alliés, பொக்கசம் trésor, ஆளுகைசெல் லுமிடம் territoire, கோட்டை forteresse, சேனை armée. On y ajoute quelquefois une huitième chose, la corporation des citoyens): — நியதப்பிரமாணம் la loi de nature; சரீரப்பிரகிருதி complexion —, tempérament du corps; மூலப் — énergie passive de la création.

*பிரகீதம், (பிர), chant.

*பிரகீர்ணம், பிரகீர்ணகம், (prakirna, ka), éventail du poil de la queue du சவரி ou yack, section, chapitre, collection de diverses choses.

*பிரகீர்த்தி, பிரகீர்த்திதம், (பிர, கீர்த்தி, ita), réputation, célébrité, déclaration.

*பிரகுணம், பிரகுண்ணியம், (பிர, குணம், ya), honnêteté, probité, excellence,

*பிரகுலம், (பிர), corps joli et excellent.

*பிரகேணகம், பிரகேலகம், (prahênaka, prahêlaka), bonbons, sucreries, — qu'on donne aux fêtes.

*பிரகேலிகம், பிரகேலிகை, (prahêlikâ), énigme, — à deviner.

*பிரகோஷ்டம், பிரகோட்டம், (prakôchta), avant bras, bas de l'épaule, cour de maison, espace ouvert environné de bâtimens.

*பிரகோபணம், (pragôpana), défense, protection, garde, conservation.

*பிரகோபம், பிரகோபனம், பிரகோபிதம், பிரகோவம், (பிர, கோபம், na, ita), grande colère, fureur, irritation, provocation, obstination.

*பிரக்கணம், பிரக்கரணம், (prakvana, prakvâna), son du luth.

*பிரக்கரம், (prakchara), cuirasse, armure, — de fer (pour un cheval ou un éléphant).



Digitized by Google

*பிரக்கியம், பிரக்கியாதம், (prakhya, பிர), ce qui est célèbre, notoire, fameux, célébrité, publicité, connaissance: பிரக்கியாதபரவீடம் marchandise que quelqu'un a le droit d'acheter le premier.

*பிரக்கியாதி, (பிர), notoriété, renommée, connaissance, éloge, ou

*பிரக்கியாதை, (பிர), célébrité, publicité, cours, marche. [sance.

*பிரக்கியானம், (பிர), connais-

*பிரக்கிரகம், (பிர, கிரகம்), esclave, captivité, emprisonnement, gêne, rêne, corde, amour, affection, rayon de —, lumière, épaule, pas, V. பிரக்கிரமம்.

*பிரக்கிரமம், (பிர, கிரமம்), aller, l'emporter, commencement, occasion, opportunité, loisir.

*பிரக்கிரகம், (பிர, கிரகம்), prise, saisie, corde de balance, rêne, licou ou bride pour les chevaux, corde pour attacher les vaches et autre bétail. [insignes royaux.

*பிரக்கிரியை, (பிர), porter les

